ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 14,594 — 1965 දෙසැම්බර් 24 වැනි සිකුරාදා — 1965.12.24

14,594 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 24 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV—உள்ளூர் ஆட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]

## உள்ளூராட்சி அறிவிப்புகள்

ඇල්.ඩී.—බී 74/39

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 ஆம் ஆண்டின் 60 ம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டபடியான (257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம், உள்ளூர் ஆட்சி அமைச்சர் முருகேசன் திருச்செல்வம் ஆகிய நான், 1963 ஆம் ஆண்டு, சனவரி மாதம் 17 ஆம் திகதி வெளியிடப்பட்ட 13,480 ம் இலக்க கசெற்றில் ஏறுவூர் கிராமப் பிரதேசம் சம்பந்தமாகப் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை, அதில் உள்ள அட்டவணையின் 2 ஆம் நிரலில் உள்ள இலக்கம் 3 கொண்ட வட்டாரத்தின் வரையறையை நீக்கி, அதற்குப் பதிலாகப் பின்வரும் வரையறையைப் புகுத்துவதால், இத்தால் திருத்துகிறேன்.

வட்டாரம் இல. 3—பின்வரும் கிராமங்களை உள்ளடக்கும்—இலுப்பையடிச்சேனை, வேப்பவேடுவன், குசாலானை, மக்குலானை, அக்காதிக்குழி, பாலாமடு, கென்பர்சேனை.

கொழும்பு,
1965 ம் ஆம் டிசெம்பர் மீ 24 ந் உ.

மு. திருச்செல்வம்,
உள்ளூர் ஆட்சி அமைச்சர்.

12-1435/1

---

ඇල්.ඩී.—බී. 27/39.

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 ம் ஆண்டின் 60 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 8 ஆம் பிரிவினால் எனக்கு, அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம், உள்ளூர் ஆட்சி அமைச்சர் முருகேசன் திருச்செல்வம் ஆகிய நான், 1962 ஆம் ஆண்டு, பெப்ருவரி மாதம் 23 ஆம் தேதிய 12,937 ஆம் இலக்க கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட பாலுகாமம் கிராமப் பிரதேசம் சம்பந்தப்பட்ட கட்டளையை, அங்கே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் இரண்டாம் பந்தியிலுள்ள 8 ஆம் இலக்க வட்டாரத்திற்குப் பதிலாக, பின்வருவனவற்றைப் புகுத்துவதனால், இத்தால் திருத்துகிறேன்.

**பகுதி II**

**வட்டாரங்கள்**

வட்டாரம் இல. 8 ஜீ. ஓ. டீ. பீ. (ஈ) கண்டத்தைச் சேர்ந்த தம்பங்கேணியும் தாமரைக் கேணியும் என்று சொல்லப்படும் பிரதேசம் அடங்கிய பகுதி.

கொழும்பு,
1965 ம் ஆம் டிசெம்பர் மீ 24 ந் உ.

மு. திருச்செல்வம்,
உள்ளூர் ஆட்சி அமைச்சர்.

12-1435/2

---

ඇල්.ඩී.—බී. 27/39.

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 ம் ஆண்டின் 60 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட, கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 8 ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம், உள்ளூர் ஆட்சி அமைச்சர் முருகேசன் திருச்செல்வம் ஆகிய நான், 1963 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 18 ஆம் தேதிய 13,567 ஆம் இலக்க கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட, சம்மாந்துறை கிழக்குக் கிராமப் பிரதேசம், சம்பந்தப்பட்ட கட்டளையை, அக்கட்டளையில் காணப்படும், அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள 13 ஆம், 14 ஆம் வட்டாரங்களுக்குப் பதிலாக, பின்வருவனவற்றைப் புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்துகிறேன்.

| பந்தி 1<br>கிராம சேவகர் பிரிவுகள் | பந்தி 2<br>வட்டாரங்கள் |
|---|---|
| சம்மாந்துறைப் பிரிவுகள் : இல. 1 (இல. 78), இல. 3 (இல. 80), இல. 4 (இல. 81), வீரமுனை (இல. 92) | **வட்டாரம் இல. 13 :** சம்மாந்துறை பிரிவுகள் 1, 3, 4 என்பவற்றுடன், சம்மாந்துறைப் பட்டின சபை எல்லைக்கு வெளியேயுள்ள வீரமுனை கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கியது |
| சம்மாந்துறை தமிழ்ப் பிரிவும் (இல. 77), சம்மாந்துறை கண்டம் ஜே. பிரிவும் (இல. 79) | **வட்டாரம் இல. 14—(அ) :** சம்மாந்துறைப் பட்டின சபை எல்லைக்கு வெளியேயுள்ள சம்மாந்துறைத் தமிழ்ப் பிரிவுக் கிராம சேவகரின் பகுதி, (ஆ) கண்டம் ஜே. கிராம சேவகர் பிரிவு முழுதும் ; ஆகியன உள்ளடங்கிய பகுதி. |

கொழும்பு 1,
1965 ம் ஆண்டு டிசெம்பர் மீ 24 ந் உ.

மு. திருச்செல்வம்,
உள்ளூர் ஆட்சி அமைச்சர்.

12-1435/3

---

ஆர். டீ.—டீ. 27/39

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் உள்ளூர் ஆட்சி அமைச்சர் முருகேசன் திருச்செல்வம் ஆகிய நான், 1962 ஆம் ஆண்டு, பெப்ருவரி மாதம், 23 ஆம் தேதிய 12,937 ஆம் இலக்கக் கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட, நாவகிரி நாகர் கிராமப் பிரதேசம் சம்பந்தப்பட்ட கட்டளையை, அங்கே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள 1 ஆம் வட்டாரத்திற்குப் பதிலாக, பின்வருவனவற்றைப் புகுத்துவதனால், இத்தால் திருத்துகிறேன் :—

| பந்தி I<br>கிராம சேவகர் பிரிவு | பந்தி II<br>வட்டாரங்கள் |
|---|---|
| 99 வெள்ள வெளி .. | வட்டாரம் 1—வெள்ள வெளி, வாளைச் சேனை, ஆணைவெட்டை, மாதானை, தாமரைக் கேணி, வேதத்துச் சேனை, ஆகிய கிராமப் பகுதிகளும், காக்கச்சிவெட்டை பிள்ளாளிவேம்பு, பீக்கிள்ளியத்துவேட்டை ஆகிய கிராமப் பிரதேசங்களின் பகுதிகளும், வாளைச் சேனைக்கருகாமையிலுள்ள, ஜீ. ஓ. டீ. பீ. கண்டம் (ஈ) யில் ஒரு பகுதியும் அடங்கிய பிரதேசம் ஆகும். |

கொழும்பு,
1965 ம் ஆண்டு டிசெம்பர் மீ 24 ந் உ.

மு. திருச்செல்வம்,
உள்ளூர் ஆட்சி அமைச்சர்.

12-1435/4

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்டேர்ண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.